அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

*அறிவித்தலும் விளக்க அறிக்கையும்!* *திகதி: 26.11.2026*

***அன்பார்ந்த தமிழ் உறவுகளே,***

*மாவீரர் நாள் என்பது தமிழினத்தின் வரலாற்றிலும் தேசிய உணர்விலும் ஆழமாகப் பதிந்துள்ள ஒரு புனிதமான நினைவுநாளாகும். மண்ணின் விடிவிற்காகத் தம் இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களை நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்துவது ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கும் உரித்தான பொதுவான உரிமையாகும். அதனை எந்தவொரு தனிநபரோ, அமைப்போ தனியுரிமையாகக் கொண்டாட முடியாது என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.*

*அன்னை நிறுவனத்தின் மீது பற்றும் அக்கறையும் கொண்ட நலன்விரும்பிகள் சிலர் தமது சொந்த முயற்சியில் இவ்வாண்டு நினைவேந்தல் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்ய விரும்பினர். அவர்களின் உணர்வுகளையும் நினைவேந்தல் உரிமையையும் மதித்து, அதற்குத் தடையாக இருக்காமல் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் ஊடாகத் தகவல்களை வழங்கி வந்தோம்.*

***நிகழ்வு மாற்றமும் எமது நிலைப்பாடும்:***

*வரலாற்றுச் சிதைப்பும் பிரிவினைவாதமும், கடந்த சில ஆண்டுகளாக அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் பெயர், அடையாளம், 35 ஆண்டுகால வரலாறு ஆகியவற்றைத் திரிபுபடுத்தியும், தமிழ்க் கல்வியையும் நோர்வே தமிழ் மக்களின் தேசிய ஒற்றுமையையும் சிதைத்து வருகின்றார்கள். சமூகத்தையும் பிளவுபடுத்தும் வகையில் சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இக்குழப்பவாதிகளின் நோர்வேயிய மட்டத்திலான செயற்பாடுகள் வரம்பு மீறியதாகவே அமைகின்றன. உண்மையான தேசிய ஒற்றுமை என்பது ஒரே இடத்தில் கூடுவதில் மட்டுமல்ல, நிறுவனங்களின் உரிமைகளையும் தனித்துவத்தையும் மதித்து நடப்பதிலுமே தங்கியுள்ளது.*

***அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் மீது அன்பும் நம்பிக்கையும் கொண்ட நலன்விரும்பிகள், பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலர் நிர்வாகத்தினருடன் அன்போடும் உரிமையோடும் கலந்துரையாடித் தமது கருத்துகளை முன்வைத்தனர். இன்று பல நாடுகளில் பிரிந்து பிரிந்து தமிழ்த் தேசியம் என்பது நலிவடைந்து செல்கின்றது. அதே போலவே நோர்வேயிலும் பிரிந்து நிற்கும் சமூகம் மேலும் பிரிவடையக் கூடாது எனும் நல்லெண்ணமே நலன்விரும்பிகளின் கருத்தாக அமைந்தது. இதற்கு மதிப்பளித்து, நினைவேந்தல் நிகழ்வினை இம்முறை மாற்றம் செய்வதற்கான ஒப்புதலைப் பெற்றோம்.***

***அதற்கிணங்க, 27.11.2026 அன்று மதியம் 12:45 முதல் மாலை 18:00 மணி வரை தமிழர் வள ஆலோசனை மைய மண்டபத்தில் நடைபெறுவதாக இருந்த பொது வணக்க நிகழ்வை இம்முறை நிறுத்தி வைப்பதற்கு நிகழ்வை ஏற்பாடு செய்த நலன்விரும்பிகள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். மாலை 18:00 மணி முதல் 19:30 மணி வரை தேசிய மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு மட்டும் உணர்வுபூர்வமாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.***

சமூகத்திற்குள் நிலவும் இந்தப் பிரிவினைவாதப் போக்குகளுக்கு ஒரு சுமுகமான முற்றுப்புள்ளி வைப்பதற்காக, எமது நலன்விரும்பிகளின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து வழங்கப்படும் ஒரு நல்லெண்ண வாய்ப்பாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் கல்விப் பணிகளுக்கும் வளர்ச்சிக்கும் தொடர்ந்தும் தடைகள் ஏற்படுத்தப்படுவதோ, தமிழர்களை ஒருங்கிணைப்பதற்குப் பதிலாகப் பிரிவினைகளை உருவாக்கும் செயற்பாடுகள் தொடர்வதோ இனியும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இத்தகைய செயற்பாடுகள் தொடருமானால், அதனால் எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்திற்குள் ஏற்படக்கூடிய மேலதிக பிளவுகளுக்கும் இவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் 35 ஆண்டுகால வரலாறு, தனித்துவம், கல்விப் பணி மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதோடு, தமிழ்ச் சமூகத்தின் உண்மையான ஒற்றுமையை வளர்ப்பதே எமது தலையாய நோக்கமாகும். எம்மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டு தங்களின் நற்கருத்துகளைத் தெரிவித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அனைத்து உறவுகளையும் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துமாறு வேண்டிக்கொள்கின்றோம். அத்தோடு, 27.11.2026 மாலை 18:00 மணிக்கு நடைபெறும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு தம் இன்னுயிரை ஈந்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவோம்.

மாவீரர்களின் ஈகத்தை மனதில் கொள்வோம்! அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் கண்ணியத்தைக் காப்போம்!

"தமிழ் எங்கள் அடையாளம்"

இவ்வண்ணம்

தலைமை நிருவாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்